பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

11 08 2026 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் 80வது சுதந்திர தின கொண்டாட்டங்களின்போது தேசிய பாடலான வந்தே மாதரத்தின் 150வது ஆண்டு உள்ளிட்டவை முன்னிலைப்படுத்தப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

2. உத்தராகண்டில் பெய்த கனமழை காரணமாக அம்மாநிலத்தில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

3. மாணவர்களின் மன நலன்களைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜும்தார் தெரிவித்துள்ளார்.

4. கொலம்பியாவில் நேற்று நேரிட்ட நிலநடுக்கத்தில் 132 பேர் உயிரிழந்தனர்.

5. தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் நெல்லை - திருச்சி அணியையும், திருப்பூர் - கோவை அணியையும் எதிர்கொள்கின்றன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் 80வது சுதந்திர தின கொண்டாட்டங்களின்போது தேசிய பாடலான வந்தே மாதரத்தின் 150வது ஆண்டு தினம், இளையோர் சக்தி மற்றும் 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இந்திய இளையோரின் பங்களிப்பு ஆகியவை முன்னிலைப்படுத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. ராஜேஷ்குமார் சிங், வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தேசியக் கொடியை பறக்கவிட்டு உரையாற்றுவார் என்று தெரிவித்தார்.

முதல்முறையாக சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்ச்சியின்போது செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து தேசியப் பாடலான வந்தே மாதரம் பாடப்படும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் எம்.ஐ.-17 ரக ஹெலிகாப்டர்கள் பங்கேற்று வானில் தேசியக்கொடி வந்தே மாதரத்தின் 150வது ஆண்டை நினைவுகூரும் சிறப்பு பதாகை ஆகியவற்றை காட்சிப்படுத்தும் என்றும் பாதுகாப்புத்துறை செயலாளர் தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும், விவாதங்களை திசைதிருப்புவதாகவும் பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, திரு. ராகுல் காந்தியின் நோக்கம் விவாதத்தில் ஈடுபடுவது என்றில்லாமல் குழப்பத்தை ஏற்படுத்தவதாக உள்ளது என்று கூறினார்.

எந்தவொரு விவகாரம் தொடர்பாக பேச்சுகளில் ஈடுபட அரசு தொடர்ந்து விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அனைத்து விவகாரங்கள் தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

அவை சுமூகமாக செயல்பட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு என்று திரு. நட்டா தெரிவித்தார்.

<<<<>>>>

மாணவர்களின் மன நலன்களைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜும்தார் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், சிபிஎஸ்சி பள்ளிகளில் மனநல ஆலோசகர்களை நியமனம் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நவோதயா பள்ளிகளில் 830 ஆலோசகர்கள் ஒப்பந்த முறையில் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கேந்திரிய வித்யாலயா பள்ளிகளிலும் மனநல ஆலோசகர்களை நியமனம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன் ஐஐடி, ஐஐஎம் போன்ற உயர்கல்வி நிறுவனங்களிலும் மனநல ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டள்ளதாக டாக்டர் சுகந்தா மஜும்தார் குறிப்பிட்டார்.

<<<<>>>>

இந்திய - அமெரிக்க கடற்படை இடையே வெடிமருந்து அகற்றுதல் கூட்டுப் பயிற்சி கொச்சியில் நேற்று தொடங்கியது.

இம்மாதம் 14ஆம் தேதி வரை நடைபெற உள்ள கூட்டுப் பயிற்சியில் போர் உபகரணங்கள் செயல்முறை விளக்கம் உள்ளிட்டவை இடம்பெற உள்ளது.

<<<<>>>>

திரிபுராவில் இருந்து முதல் முறையாக ஒரு மெட்ரிக் டன் கடுகுத் தேன் துபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைய உதவியுடன் இது மேற்கொள்ளப்பட்டது.

இதன்மூலம் திரிபுராவின் கடுகுத் தேனுக்கு சர்வதேச சந்தை வாய்ப்பு கிடைத்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜார்கண்டில் தேர்வு முறைகேட்டிற்கு எதிராக நேற்று நடைபெற்ற போராட்டத்தின்போது போராட்டக்குழு தலைவர் திரு. Devendranath Mahato-வின் உடல்நிலை மோசமானதையடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசுப் பணியாளர் தேர்வுகளில் முறைகேடுகள் நடந்ததாக கூறி, திரு. Mahato கடந்த 9 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

<<<<>>>>

மாணவர்களுக்கு உரிய நேரத்தில் கல்வி உதவித் தொகை வழங்கப்படுவதன் மூலம் அவர்கள் தங்களது கல்வியில் திறம்பட கவனம் செலுத்த முடியும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நாடு முழுவதும் தேசிய கல்வி உதவித் தொகை இணையதளம் மூலம் வேளாண்துறை மாணவர்களுக்கான உதவித்தொகையை அவர் விடுவித்தார்.

இதன் மூலம் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேளாண்துறை மாணவர்களுக்கு 21 கோடி ரூபாய்க்கும் மேலான தொகை அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக பரிமாற்றம் செய்யப்பட்டது.

அப்போது பேசிய திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான், நேரடி பணப் பரிமாற்றம் மூலம் வேளாண்துறை மாணவர்கள் நிதியுதவியைப் பெறுவதில் ஏற்படும் தாமதம் தவிர்க்கப்படும் என்று தெரிவித்தார்.

வேளாண்மையின் எதிர்காலத்திற்கு மாணவர்களை தயார் செய்ய வேளாண் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி முறை ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டும் என்று திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தினார்.

<<<<>>>>

அரசு மின்னணு சந்தை மூலம் உரிய நேரத்தில் தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய முடிவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற அரசு மின்னணு சந்தை தொடங்கப்பட்ட 10ஆம் ஆண்டு நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த வசதி அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக அரசு நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவும், கொள்முதலில் வெளிப்படைத்தன்மை கடைபிடிக்கப்படவில்லை என்றும் கூறினார்.

ஆனால் தற்போது அந்த சூழல் கிடையாது என்று அவர் தெரிவித்தார்.

அரசு மின்னணு சந்தை மூலம் 20 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான மதிப்புடைய பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

உத்தராகண்டில் பெய்த கனமழை காரணமாக அம்மாநிலத்தில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

Niti பள்ளத்தாக்கு பிராந்தியத்தில் சமோலி மாவட்டத்தில் பாலம் அடித்துச் செல்லப்பட்டது.

பாலம் அடித்துச் செல்லப்பட்டதால் அந்தப் பகுதி முக்கிய நகரத்தில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்திற்குச் செல்ல வேண்டாம் என்று அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நிலைமை சீராகும் வரை அங்கு செல்வதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தாமி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

கொலம்பியாவில் நேற்று நேரிட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 132 ஆக அதிகரித்துள்ளது. 570 பேர் காயமடைந்துள்ளனர்.

அந்நாட்டின் மேற்குப் பகுதியில் நிகழ்ந்த இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவில் 7 புள்ளி 4ஆக பதிவானது.

இதன் காரணமாக நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் சேதமடைந்ததாகவும், பலர் இடிபாடுகளுக்கு இடையே சிக்கியுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீட்புக் குழுவினரும், உள்ளூர் மக்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொலம்பியாவில் கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மிக மோசமான நிலநடுக்கம் இது என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொலம்பியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக அண்டை நாடுகளான ஈக்வடார் மற்றும் பனாமாவிலும் நில அதிர்வு உணரப்பட்டதாக கூறப்படுகிறது.

எனினும் பெரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஈரான் மீது அமெரிக்க கடற்படை தாக்குதலை நிறுத்தும் வரை ஹோர்முஸ் நீரிணை திறக்கப்படாது என்று ஈரான் அறிவித்துள்ளது.

தலைநகர் டெஹ்ரானில் செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு. இஸ்மாயில், ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய ராணுவம் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு காரணமாக ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அமெரிக்க இஸ்ரேலிய நாடுகள் விதிக்கும் நிபந்தனைகளைப் பொறுத்தே அந்த நீரிணை மீண்டும் திறக்கப்படும் என்று ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு. இஸ்மாயில் கூறினார்.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மதுரை அணி 36 ரன் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

திண்டுக்கல்லில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த மதுரை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 195 ரன் எடுத்தது.

196 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய சேலம் அணி, 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 159 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இன்று மாலை மணி 3.30க்கு தொடங்க உள்ள ஆட்டத்தில் நெல்லை அணி - திருச்சி அணியை எதிர்கொள்கிறது.

இரவு மணி 7.30க்கு தொடங்கும் மற்றொரு போட்டியில் திருப்பூர் அணி - கோவை அணியை எதிர்கொள்கிறது.

------------

Brownsburg சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்றுக்கு இந்தியாவின் Dhakshneswar Suresh பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<< >>>>**